# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2008, ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 8.00 தபாற் செலவு : ரூபா 5.00

# 2008 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 63/2007

**தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப் பட்டிருந்தவர்களும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அடுத்துப்பின்னர் தொழிலுக்கமர்த்தப்பட்டவர் களுமான அலுவலர்களும் சேவையாளர்களும் ஒய்வூதிய வழங்குகைக்குத் தகவுடையோராகவிருப்பதனை இயலச் செய்வதற்குச் சிறப்பேற்பாடு செய்வதற்கும், அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் தொழிலுக்கு அமர்த்தப் பட்டிருந்து, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அடுத்துப் பின்னர் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட அலுவலர் களுக்கும் சேவையாளர் களுக்கும் ஒய்வூதியம் வழங்குதல்.

**2.** (இடமாற்றத்தக்க சேவையிலிருந்து அலுவலர் அல்லது சேவையாளர் அல்லாதவரும்) 1979 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று தேசிய வீடமைப்பு திணைக் களத்தில் தொழிலுக்கமர்த்தப்படிருந்தவரும், (இதனகத்துப் பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதான) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அடுத்துப் பின்னர் தொழிலுக்கமர்த்தப்பட்டவருமான ஒவ்வோர் அலுவல ரும் சேவையாளரும், அதிகாரசபையினால் அவர் தொழிலுக் கமர்த்தப்பட்டிருப்பது எப்படியிருப்பினும், அதிகாரசபையினால் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்ட தேதியிலிருந்து அதிகாரசபையுட னான அவரது சேவைக்காலப்பகுதி முடிவடையும்வரை தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் பகிரங்க அலுவலரொருவராகப் பதவியில் தொடர்ந்திருந்தவராகக் கருதப்படுதல் வேண்டுமென்ப துடன், அதிகாரசபையினாலான அவரது சேவைக்காலப்பகுதி தேசிய வீடமைப்புத் திணைக்களத்துடனான அவரது சேவைக் காலப்பகுதியுடன் சேர்க்கப்படும்போது பத்து ஆண்டுகளாக அல் லது அதற்கு மேற்பட்டதாக இருக்குமாயின், அதிகாரசபையுட னான அவரது சேவைக்காலப்பகுதியின் முடிவில், ஒய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின்கீழான ஓய்வூதியமொன்று வழங்கப்படுவதற் குத் தகவுடையவராதலும் வேண்டும்.

2-PL 002933 -1,300 (2008/04)

அளிப்புச் செய்யப்படு முன்னர் திருப்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள்.

3. (1) இரண்டாம் பிரிவின்கீழ் ஓய்வூதியமொன்று வழங்கப்படுவதற்குத் தகவுடையவராகவரும் ஆள் ஒவ்வொருவரும், அதிகார சபையுடன் நிரந்தரத் தொழிலை அவர் ஏற்றுக்கொள்வதன்மேல், ஓய்வூதியத்துக்குப் பதிலாக அவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணிக்கொடையானது அவரினால் அல்லது அவரது மரபுரிமையாளர்களினால் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு மீளளிக்கப்படுவதற்கமைய, அத்தகைய ஓய்வூதியத்தைப் பெறுதல் வேண்டும்.

(2) இரண்டாம் பிரிவின்கீழ் ஓய்வூதியமொன்று வழங்கப்படுவதற்குத் தகவுடையவராகவரும் ஆள் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றுக்கமைய அத்தகைய ஓய்வூதியத்தைப் பெறுதல் வேண்டும்:-

(அ) அவர் தொடர்பில் ஊழியர் சகாய நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட தொழில்தருநரின் உதவுதொகை அதிலிருந்து மீளப் பெறப்படுதல் ; அத்துடன்

(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு அவர் தொடர்பில் செலுத்தப்பட்ட உதவுதொகையின் மொத்தத் தொகை மீளப்பெறப்படுதல்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அறவிடப்படும் தொகைகள் அதிகாரசபையின் வருமானத்தினுள் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் போது, சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

5. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"ஊழியர் சகாய நிதியம்" என்பது, 1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் என்று பொருளாகும் ;

"ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப் பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்று பொருளாகும் ;

"பணிக்கொடை" என்பது, 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின்கீழ் கணக் கிடப்பட்ட பணிக்கொடை என்று பொருளாகும் ; அத்துடன்

"தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை" என்பது, 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ்த் தாபிக் கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்